**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.4322/ஆ5/2024, நாள்.23.01.2025**

.....

பொருள் பள்ளிக் கல்வி – தமிழ்நாடு அறிவியல் இயக்கம் – குழந்தைகள் அறிவியல் மாநாடு 2024 – அறிவியல் வழிகாட்டி ஆசிரியர்களையும் மற்றும் ஆய்வறிக்கை சமர்பிக்க உள்ள மாணவ / மாணவிகளையும் 25.01.2025 அன்று நடைபெறும் அறிவியல் மாநாட்டில் கலந்துக் கொள்ள தெரிவித்தல் – சார்பு – ~~பயிற்சியில் கலந்துக்கொள்ள தெரிவித்தல்– சார்பு~~

பார்வை
1. சென்னை – 6, பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (நாட்டு நலப்பணித் திட்டம்) கடித ந.க.எண்.32847/எம்2/இ1/2022, நாள். 24.10.2024
2. வேலூர் மாவட்டம், தமிழ்நாடு அறிவியல் இயக்கம், ஒருங்கிணைப்பாளரின் கடித நாள். 29.10.2024
3. இவ்வலுவலக கடித ந.க.எண்.4322/ஆ5/2024, நாள். 04.11.2024
4. வேலூர் மாவட்டம், தமிழ்நாடு அறிவியல் இயக்கம், ஒருங்கிணைப்பாளரின் கடித நாள். 21.01.2025 (இவ்வலுவலகம் பெறப்பட்ட நாள். 23.01.2025)

•••••

மாணவர்கள் மத்தியில் அறிவியல் மற்றும் ஆய்வு மனப்பான்மையை வளர்க்கும் நோக்கில் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் (TNSF) வருடந்தோறும் தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாட்டினை நடத்தி வருகிறது. இந்த வருடம் (2024) அறிவியல் மாநாட்டை 10 முதல் 17 வயதிற்குட்பட்ட குழந்தைகள் ஆய்வுகளை மேற்கொண்டு தங்களது ஆய்வறிக்கைகளை சமர்பிக்க ஏதுவாக பார்வை 1 மற்றும் 3–ன் படி ஆய்வுகளை மேற்கொள்ளும் குழந்தைகளின் வழிகாட்டி ஆசிரியர்களுக்கான ஒரு நாள் பயிற்சி முகாமானது 08.11.2024 அன்று வேலூர், அரசு முஸ்லீம் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

தற்போது பார்வை 4–ல் காணும் கடிதத்தில் மேற்காண் பயிற்சியில் பங்கேற்ற வழிகாட்டி ஆசிரியர்கள் தங்கள் பள்ளியில் பயிலும் மாணவ / மாணவிகளை தேர்வு செய்து அவர்கள் மூலம் தயாரிக்கப்பட்ட ஆய்வறிக்கைகளை சமர்பிக்க ஏதுவாக மாவட்ட அளவிலான குழந்தைகள் அறிவியல் மாநாடு 25.01.2025 (சனிக்கிழமை) அன்று காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை கணியம்பாடி வட்டம், அடுக்கம்பாறை, ஸ்ரீ வெங்கடேஸ்வரா பாலிடெக்னிக் கல்லூரியில் நடைபெறும் எனவும், இதில் ஆய்வுகட்டுரைகளை சமர்பிக்கும் வகையில் சார்ந்த வழிகாட்டி ஆசிரியர்களுடன் சம்மந்தப்பட்ட மாணவ / மாணவிகள் பங்கேற்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்காணும்படி நடைபெறவிருக்கும் மாவட்ட அளவிலான குழந்தைகள் அறிவியல் மாநாட்டில் ஆய்வுகட்டுரைகளை சமர்பிக்கும் பொருட்டு வழிகாட்டி ஆசிரியர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட மாணவர்கள் பாதுகாப்புடன் கலந்துக்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரசு / அரசு நிதியுதவி பெறும் நடுநிலை / உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் தனியார் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

(குறிப்பு – மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது)

23.01.25 முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்,
அரசு / அரசு உதவிபெறும் நடுநிலை /உயர் / மேல்நிலைப் பள்ளிகள் / தனியார் பள்ளிகள், வேலூர் மாவட்டம்.

நகல்–

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலை / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி)
   வேலூர் மாவட்டம்.
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
2. மாவட்ட ஒருங்கிணைப்பாளர்,
   தமிழ்நாடு அறிவியல் இயக்கம்,
   வேலூர் மாவட்டம்.